# இலங்கை பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த(உ.தர)ப் பரீட்சை - 2018 ஒகஸ்ட்

க.பொ.த(உ.தர)ப் பரீட்சை - 2018 ஒகஸ்ட் 06 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் 01ஆம் திகதி வரையும், நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகளும் நேர அட்டவணைகளும் பாடசாலை அதிபர்களுக்கும் தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதிஅட்டைகளும் நேரஅட்டவணைகளும் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உடனடியாக அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். எக்காரணத்திற்காகவேனும் தாமதிக்க வேண்டாம்.

இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதத்துடன் விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் அலுவலகத்தில் பதிவுசெய்து அனுப்பிய பற்றுச்சீட்டுடன் இத்திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும். அல்லது நேரடியாக வருகைதர வேண்டும்.

அனுமதியட்டைகள் கிடைக்கப்பெற்று பாடமாற்றம், மொழி மாற்றம் அல்லது வேறு ஏதேனும் மாற்றங்கள் தேவைப்படும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாக பரீட்சைத் திணைக்களத்தின் பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளைக்கு வருகை தந்தோ அல்லது கீழ்க் குறிப்பிடப்படும் தொலைபேசி அல்லது தொலைநகல் இலக்கத்துக்கோ 2018 ஜுலை 20 ஆம் திகதிக்கு முன் அறியத்தரல் வேண்டும்.

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையோ அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டோ அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதி பத்திரமோ இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாகக் கவனத்திற் கொள்ளப்படும்.

**இவ்வருடத்திலிருந்து 3 மணித்தியாலங்களைக் கொண்ட வினாப்பத்திரங்களுக்கு அவற்றை வாசிப்பதற்கும் வினாக்களைத் தெரிவுசெய்வதற்குமாக 10 நிமிடங்கள் மேலதிகமாக வழங்கப்படுகின்றது என்பதை அறியத்தரவும்.**

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புக்கள் வைத்திருந்து விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடத்தல் பரீட்சை விதிமுறைகளுக்கு அமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்கள் எடுத்துச்செல்லுதல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதுடன் அவ்வாறு எடுத்துச் சென்றால் ஐந்து வருடங்கள் பரீட்சைகளுக்குத் தடைசெய்யப்படும்.

| | | |
|---|---|---|
| விசாரணை : | தொலைபேசி எண் | 011-2784208, 2784537 |
| | தொலைநகல் இலக்கம் | 011-2784422 |
| | தபால் முகவரி | பரீட்சை ஆணையாளர் நாயகம்,<br>பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளை,<br>தபாற் பெட்டி 1503, கொழும்பு. |

**பரீட்சைக் காலங்களின்போது 24 மணித்தியாலயங்களும் விசாரணைகளுக்காக செயற்படும் தொலைபேசி இலக்கங்கள் : 0112786200, 2784201, 2784204, 2786205, 2784206, 2787207,2785202,**

**அவசர அழைப்பு இலக்கம் 1911**

**பி.சனத் பூஜித**
**பரீட்சை ஆணையாளர் நாயகம்**

6/3/உயர்.தரம்/2018
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த, பத்தரமுல்ல
2018.07.13